வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 48/2021

வழக்கு சாட்சி LW3/PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ்குமார் | ஜாதி | |
| கணவர்/தந்தை | ராமச்சந்திரன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 48 |

தேதி 20.11.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ஆஜர் இல்லை. மனுதாரர் தரப்பு 355 BNSS பிரிவின் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் புத்தகரத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது உறவினர் ஆவார். அவரது வீடு எனது வீட்டில் இருந்து 3வது வீடு. 2019ம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. வீட்டில் இருந்த டீவி காணாமல் போய்விட்டதாக கூறினார். காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தோம். 15 நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் அழைத்து டீவி கிடைத்துவிட்டதாக கூறினார்கள். டீவியையும் திருடிய ஆளையும் காவல் நிலையத்தில் காட்டினார்கள். அ.சா.1 டீவியை அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

டீவி காணாமல் போன வீட்டிற்கு கதவுக் கிடையாது என்றாலும் திறந்து தான் இருக்கும் என்றால் சரிதான். டீவியை அந்த தெருவில் இருப்பவர்கள் எடுப்பதற்கு வாய்ப்பு

உள்ளது என்றால் ஆமாம். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். மணிகண்டன் கூறிதான் தெரியும் என்றால் ஆமாம். மணிகண்டனிடம் காவல் நிலையத்தில் டீவியை காட்டவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் எனது உறவினர் என்பதால் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். போலீசார் காவல் நிலையத்தில் காட்டிய டீவி தொலைந்த டீவி அல்ல என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.